**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 115/மா/2021**

**நாள் : 07.04.2022**

திரு.A. சதீஷ்குமார்,

சென்னை – 600 081. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, சாஸ்திரிநகர், 1–வது தெரு, எண்.15/11, என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. A.சதீஷ்குமார் என்பவரின் 27.10.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 115/மா/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, தண்டையார்பேட்டை, சாஸ்திரிநகர், 1–வது தெரு, எண்.15/11, என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. A.சதீஷ்குமார் என்பவர் தன்னுடைய 27.10.2021 நாளிட்ட புகார் மனுவில், " சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை, மண்டலம்–04, வார்டு 41, எண்ணூர் நெடுஞ்சாலை, அஜீஸ் நகர் 2 வது தெரு, கதவு எண். 05, K.K.hospital என்னுமிடத்தில் திரு.குமார் என்பவர் எந்த விதமான கட்டிட அனுமதியும் பெறாமல் கட்டிட விதிமுறைகளுக்கு புறம்பாக வணிக நோக்கத்துடன் மூன்று மாடி தனியார் மருத்துவமனை கட்டிக்கொண்டு வருகிறார். மேற்கண்ட இந்த அனுமதியற்ற கட்டிடத்தில் எதிர்காலத்தில் எங்கள் பகுதி பொதுமக்கள் தான் தனியார் மருத்துவ சேவைக்கு செல்ல நேரிடும். அந்த நேரத்தில் இந்த அனுமதியற்ற விதி மீறல் கட்டடத்தால் ஏதேனும் எதிர்பாராதவிதமாக சம்பவங்கள் நேர்ந்தால் அது விபரீதமாகிவிடும். மேலும் முறையாக சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டிட விண்ணப்ப தொகை போன்ற வரவும் மாநகராட்சிக்கு கிடைக்காமல் போய்விடுகிறது. இந்த விசயம் தொடர்பாக ஏற்கனவே நான் மேற்கண்ட மண்டல அலுவலகத்திற்கு முறையாக எழுத்து பூர்வமான புகார் மனு 03.07.2021 அன்று பதிவுத்தபாலில் அனுப்பியிருந்தேன். எனினும் மேற்கண்ட அலுவலர்கள் வழக்கம்போல் பெயருக்கு ஒரு வேலை நிறுத்த அறிவிப்பு மட்டும் அனுப்பிவிட்டு மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முக்கிய சாலையின் சந்திப்பில் உள்ள இந்த அனுமதியற்ற கட்டிடத்தின் தினசரி கட்டுமானப்பணியை மேற்கண்ட அதிகாரிகள் பார்வையில் படாமல் இருக்க வாய்ப்பே இல்லை. எனினும் எந்த உறுதியான சட்ட நடவடிக்கையும் தற்போது வரை எடுக்கவில்லை. எனவே இந்த

புகார் மனுவினை விரைவில் விசாரணை செய்து மேற்கண்ட விதிமீறல் அனுமதியற்ற கட்டிடத்தின் மீது the Tamilnadu Town and Country Planning act 1971 சட்டப்பிரிவு 56, 57 மற்றும் 85ன் படி தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்க மாநகராட்சி மண்டல அலுவலர்களுக்கு உத்திரவிட வேண்டியும், இதுவரை முறையாக நடவடிக்கைகள் எடுக்காத அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டியும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.11.2021 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்–04, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களிடம் கோரப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்–04, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோரை 24.03.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.3.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4)முறையீட்டு மனுதாரர் 24.03.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–04ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் 24.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" சென்னை, தண்டையார்பேட்டை, மண்டலம் 4, வார்டு 41, எண்ணூர் நெடுஞ்சாலை, அஜீஸ் நகர், இரண்டாவது தெரு, கதவு எண்.05 என்கின்ற இடத்தில் அனுமதி பெறாமல் வணிக நோக்கத்துடன் கட்டப்பட்டுள்ள திரு.குமார் என்பவரின் கட்டடம் முறையான அனுமதி ஏதும் பெறாமல் கட்டப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தனியருக்கு கடந்த 22.06.2021 அன்று Stop Work Notice-ம் 26.07.2021 அன்று மாநகராட்சி ஆணையாளரிடம் அனுமதி பெற்று Lock & Seal and Demolition Notice–ம் வழங்கப்பட்டு, காவல் துறையினரின் பாதுகாப்புடன் அக்கட்டடத்திற்கு Seal வைக்க சென்றபோது தனியர் மேற்கண்ட கட்டடத்தை வரன்முறை (Regularisation) செய்யும்பொருட்டு அரசு முதன்மை செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு 5.8.2021ல் மேல்முறையீட்டு மனு அனுப்பியுள்ளதாக தெரிவித்து கட்டடத்தை Seal வைக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளார். ஆனால் அரசிடமிருந்து எந்த தடையாணையும் பெறப்படவில்லை.

மேற்கண்ட மனுவின் மீது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையிலிருந்து எவ்வித ஆணையும் மாநகராட்சியால் பெறப்படாததால், அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்தை சட்டப்படி Lock and Seal காவல்துறையின் பாதுகாப்புடன் செய்திட 3.2.2022 அன்று காவல்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. உள்ளாட்சி தேர்தல் காரணமாக பாதுகாப்பு வழங்கப்படவில்லை. தற்போது மீண்டும் காவல்துறையை அனுகி, அவர்களின் பாதுகாப்புடன் மேற்கண்ட கட்டடத்தை சட்டப்படி Lock and Seal செய்திட நடவடிக்கை ஓரிரு தினங்களில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பாக தனியருக்கு அளிக்கப்பட்ட Stop Work Notice, Lock and Seal Notice, Lock and Seal Order ஆகியவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

5) இந்நேர்வு தொடர்பாக முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

- திரு. A.சதீஷ்குமார் என்பவர் தன்னுடைய 27.10.2021 நாளிட்ட புகார் மனுவில், சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை, மண்டலம்–04, வார்டு 41, எண்ணூர் நெடுஞ்சாலை, அஜீஸ் நகர் 2 வது தெரு, கதவு எண். 05, K.K.hospital என்னுமிடத்தில் திரு.குமார் என்பவர் எந்த விதமான கட்டிட அனுமதியும் பெறாமல் கட்டிட விதிமுறைகளுக்கு புறம்பாக வணிக நோக்கத்துடன் மூன்று மாடி தனியார் மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது என்று புகார் மனு அளித்துள்ளார்.

- முறையீட்டு மனுதாரர் திரு A. சதீஷ்குமார் 24.03.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

- திரு. குமார் அவர்களுக்கு 22.06.2021 அன்று Stop work Noticeம் 26.07.2021 அன்று மாநகராட்சி ஆணையாளரிடம் அனுமதி பெற்று Lock & Seal and Demolition Notice–ம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அக்கட்டிடத்திற்கு Lock and Seal செய்திட ஆணையரின் அனுமதி பெறப்பட்டு அக்கட்டிடத்திற்கு Lock & Seal வைக்க சென்ற போது தனியர் மேற்கண்ட கட்டடத்தை வரன்முறை (Regularisation) செய்யும்பொருட்டு அரசு முதன்மை செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு 5.8.2021ல் மேல் முறையீட்டு மனு அனுப்பியுள்ளதாக தெரிவித்து கட்டடத்தை Seal வைக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளதை விசாரணையில் அறியமுடிகிறது.

- மேற்கண்ட மனுவின் மீது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையிலிருந்து எவ்வித ஆணையும் மாநகராட்சியால் பெறப்படாததால், அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்தை சட்டப்படி Lock and Seal காவல்துறையின் பாதுகாப்புடன் செய்திட 3.2.2022 அன்று காவல்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. உள்ளாட்சி தேர்தல் காரணமாக பாதுகாப்பு வழங்கப்படவில்லை. தற்போது மீண்டும் காவல்துறையை அனுகி, அவர்களின் பாதுகாப்புடன் மேற்கண்ட கட்டடத்தை சட்டப்படி Lock and Seal செய்திட நடவடிக்கை ஓரிரு தினங்களில் மேற்கொள்ளப்படும் என உதவி செயற்பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மனுதாரர் புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளதன் அடிப்படையில் இம்முறை மன்ற நடுவத்தின் நேரடி விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் நேரடி விசாரணைக்கு ஆஜராகாமலும், உரிய காரணங்களை குறிப்பிட்டு தன்னால் நேரில் ஆஜராக முடியாததற்கு அனுமதி வேண்டவோ அல்லது வேறு ஒரு தேதியில் விசாரணையை மேற்கொள்ளுமாறு அனுமதி கடிதம் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கவில்லை. இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இதுபோன்ற தவறுகளை இனிவரும் காலங்களில் தவிர்க்குமாறும் தன்னால் அளிக்கப்படும் புகார் மனு குறித்து மேற்கொள்ளப்படும் நேரடி விசாரணையில் தவறாது நேரில் ஆஜராகுமாறு

அறிவுறுத்தப்படுகிறார். மேலும் திரு. குமார் என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை மாநகராட்சி அலுவலர்கள் தொடர் நடவடிக்கை எடுத்து கதவு எண்.05, எண்ணூர் நெடுஞ்சாலை, அஜிஸ் நகர் என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை சட்டப்படி பூட்டி சீல் வைத்திடும் நடவடிக்கை, மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உரிய நடவடிக்கையினை எடுத்திட மண்டல அலுவலர், மண்டலம் –04 அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 07–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு A.சதீஷ்குமார்,
   எண்.15/11, 1–வது தெரு,
   சாஸ்திரி நகர், தண்டையார்பேட்டை,
   சென்னை – 600 081.
2. மண்டல அலுவலர்,
   மண்டலம்–04,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600 021.
3. ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   (மழைநீர் வடிகால் துறை),
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக